# மார்க்கக் கல்வியைப் பெறுவதில் முஸ்லிம் பெண்கள் பின்னடைந்துள்ளமைக்கான காரணங்கள்: நிக்கவெவ கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு

# THE REASONS FOR BACKWARDNESS OF MUSLIM WOMEN IN GAINING RELIGIOUS EDUCATION: SPECIAL REFERENCE TO NIKKAWEWA VILLAGE

MS. Ismiya Begum[1] , SMM. Mazahir[2], YM. Shajahan[3]

1. MS. Ismiya Begum (Assistant Lecturer), Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil.
2. SMM. Mazahir (Senior Lecturer), Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil.
3. YM. Shajahan (Teacher), Al-Sahwa Arabic College, Palamunai.

Corresponding author's e-mail: Izzahis123@gmail.com

**Abstract**

It has become a necessity for Muslim women to acquire religious education along with general education to meet the challenges of the present time. This will be a permanent solution for the problems they face in the society. In Sri Lanka, many organizations and institutions contribute and serve for this purpose. However, it has been identified that there is lack of provision for women's education in Nikkawewa where there is a great need for these services.

This research aims to identify the state of women in religious education, their interest in learning, how they get knowledge and whether it is satisfactory. This also examines the reasons for the decline of religious knowledge and practices in Nikkawewa area and also gives solutions involve in order to build a healthy society. Data for the study was collected using primary sources.

**Key words:** Religious Education, Muslim Women, Religion, Society, Nikkawewa

## 1. அறிமுகம்

இஸ்லாம் ஆன்மீகம், லௌகீகம் இரண்டையும் சமநிலையில் பேணும் மார்க்கமாகும். மனித தேவைகள், நலன்களைக் கருத்திற் கொண்டு அது உலகியல் அறிவை ஆதரிக்கும் அதே நேரம் ஒரு மனிதனின் ஈருலக வாழ்வின் வெற்றிக்கு மார்க்க கல்வியையும் அது வலியுறுத்துகின்றது. ஒரு தனிமனிதனை ஆன்மீக, லௌகீக ரீதியாக நெறிப்படுத்துவதற்கான அனைத்து அறிவு சார்ந்த கல்வியையும் இஸ்லாம் மார்க்கக் கல்வி என வரையறுக்கின்றது. ஒரு பெண் தன்னைப் பாதுகாக்கவும், தான் எதிர்கொள்ளும் குடும்ப, சமூக, சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும், சீரான சமுதாயத்தை உருவாக்கவும் இஸ்லாமிய ஷரீஆ அனுமதித்துள்ள அனைத்து துறைசார்ந்த கல்வியிலும் கரிசனை காட்டவேண்டியுள்ளாள். எனினும் இவ்வாய்வானது ஒரு முஸ்லிம் பெண் தனக்கும் தனது இறைவனுக்கும் இடையிலான தொடர்பையும் பிறமனிதர்களுடனான தொடர்பையும் இஸ்லாமிய வரையறைகளுக்குள் அமைத்துக் கொள்வதற்கான சமயக் கல்வியை ''மார்க்கக் கல்வி'' என்பதனூடாகக்

கருதுகின்றது. சிறந்த பண்பாட்டுப் பயிற்சியை ஏற்படுத்துவது இஸ்லாமிய கல்வியின் இலட்சியங்களில் ஒன்றாகும். இத்தகைய பயிற்சியை வழங்குவதன் மூலம் தனிமனிதன் என்ற நிலையில் ஒரு மனிதன் தன்னை நெறிப்படுத்திக் கொள்வதோடு இஸ்லாம் எதிர்பார்க்கும் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கு தகுதியுடையவனாகவும் அவனை அது மாற்றுகின்றது. இதனால்தான் ஆண், பெண் இருபாலாரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என இஸ்லாம் பணிக்கிறது.

இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்தவரை ஸஹாபிய்யாக்கள், அவர்களைத் தொடர்ந்த காலங்களில் வாழ்ந்த பெண்கள் மார்க்க கல்வியைக் கற்பதிலும், பரப்புவதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதிலும் சமகால முஸ்லிம் பெண்களுக்கு முன்னுதாரணமானவர்களாக இருந்துள்ளார்கள். இஸ்லாமிய உலகில் குறிப்பிட்டுக் காட்டக் கூடிய ஒரு சில பெண்மணிகள் இப்பணியை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதனை மறுக்க முடியாது. ஆனால் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கை போன்ற நாடுகளில் எத்தனை பெண்கள் மார்க்க அறிவினைக் கற்றுக் கொள்வதில் கரிசனை கொண்டுள்ளார்கள் என்பது கேள்விக்குரியே. இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றும் மார்க்க சட்டதிட்டங்களைக் கூட அறியாத பெண்கள் எம்மத்தியில் உள்ளனர். பெண் என்பவள் ஒரு சமூகத்தின் பிரதான அலகாகும். அவளின் பணி குடும்பத்தோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. சிறந்த குடும்ப நிர்வாகத்திற்கான மூல ஊற்று பெண் ஆவாள். குழந்தை வளர்ப்பு, குடும்ப உறவுமுறைகளைப் பேணுதல், கணவனுக்கு மார்க்க ரீதியாக ஒத்துழைப்பு வழங்கல், அழைப்புப் பணியில் ஈடுபடுதல், ஏனைய சமூகப் பணிகளில் ஈடுபடுதல் என அவளின் பணி விரிந்து செல்கின்றது. இவற்றை சரிவர நிறைவேற்ற அவள் மார்க்க அறிவு பெற்றிருப்பது அவசியமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நிக்காஹ், தலாக், குல்உ, பஸ்கு, ஹைழ், நிபாஸ், நபகா, கிஸ்வா, ஹிஜாப், பராயிழ் போன்ற தனது தனிப்பட்ட வாழ்வில் தெரிந்திருக்க வேண்டிய சட்டதிட்டங்கள் பற்றிய தெளிவு அவளிடம் இருக்க வேண்டும். அத்தோடு அவள் பெறவேண்டிய உரிமைகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ள மார்க்க அறிவினை ஒரு பெண் பெற்றிருத்தல் கட்டாயக் கடமையாகும். ஏனெனில் அவளது தனிப்பட்ட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், தீர்மானம் மேற்கொள்ளவும், தன்னைத் தற்காத்து தலைநிமிர்ந்து சமூகத்தில் வாழவும், குடும்பத்திலும், சமூகத்திலும் தனக்குரிய இடத்தைப் பெற்று வாழவும் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அவளுக்கிருக்கின்றது.

தனது குடும்பத்தையும் சமூகத்தையும் சுவர்க்கத்தை நோக்கி வழிகாட்டக் கூடிய முதன்மையான, முன்மாதிரியான ஒரு பெண்ணாகவும் அவள் இருக்கவேண்டுமெனில் உலகக் கல்வியோடு இணைந்ததாக மார்க்க கல்வியையும் அவள் பெறுதல் வேண்டும். இது அவளின் பொறுப்பும் கூட. முஸ்லிம் பெண்கள் இன்று குடும்ப ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு அவர்களிடம் போதியளவு மார்க்க அறிவு இன்மையே பிரதான காரணமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை பாடசாலைகள், இஸ்லாமிய அமைப்புக்கள் (இயக்கங்கள்), அறபுக் கலாசாலைகள், அஹதிய்யா வகுப்புக்கள், பல்கலைக்கழகங்கள், இஸ்லாமிய ஆய்வு மையங்கள், மார்க்கம் சம்பந்தமான ஏனைய கல்விசார் நிறுவனங்கள் போன்றனவும் குடும்பம், மஸ்ஜித் என்பனவும் பெண்களுக்கு மார்க்க அறிவினை வழங்குவதில் பெரும் பங்காற்றி வருகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை. என்றாலும் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக அவற்றின் பணி விசாலமடைந்தள்ளதா? பெண்கள் மார்க்க அறிவினைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளனரா?

இவற்றின் பணிகள் எந்த அளவு தூரம் பெண்களைச் சென்றடைகின்றன? போன்ற சில அடிப்படையான கேள்விகளே இவ்வாய்வுக்கான உந்துதலை வழங்கியது.

இதன்படி இவ்வாய்வுக்காக அனுராதபுர மாவட்டத்தில், கெகிராவைப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிக்கவெவ எனும் கிராமம் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை சுமார் 130 குடும்பங்கள் உள்ளன. இப்பிரதேசத்தில் சுமார் 284 பெண்கள் உள்ளனர். அவர்களுள் ஐந்து வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகள் 48 பேர் காணப்படுகின்றனர். இவர்களுள் 15 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் எண்ணிக்கை 236 ஆகும். இலங்கையில் பெண்களுக்கு மார்க்க அறிவினை வழங்குவதில் பல்வேறு நிறுவனங்கள், இயக்கங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வந்தபோதும் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் மத்தியில் மார்க்க அறிவு மிகவும் பின்னடைந்துள்ள ஒரு நிலையில் இருப்பதனை ஆய்வாளர்களால் அவதானிக்க முடிந்தது. இதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் பிரதேசத்தின் பெண்கள் மார்க்க கல்வியைக் கற்பதற்கும், அதனை அவர்கள் தமது நடைமுறை வாழ்வில் செயற்படுத்துவதற்கும் தூண்டுதல் அளித்து, ஈருலக வாழ்விலும் அவர்கள் வெற்றி பெறுவதற்கு அவர்களைத் தயார்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாய்வானது மார்க்க அறிவில் பிரதேச முஸ்லிம் பெண்களின் நிலைப்பாடு, மார்க்கம் சம்பந்தமான விடயங்களை கற்றுக் கொள்வதற்கான அவர்களின் விருப்புநிலை, பிரதேசத்தில் பெண்கள் மார்க்க சம்பந்தமான அறிவினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள், அதனை வழங்குவதில் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு, மார்க்க அறிவில் பெண்கள் பின்னடைந்துள்ளமைக்கான காரணங்கள் என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளதோடு, இறுதியில் முஸ்லிம் பெண்கள் மத்தியில் மார்க்க அறிவினை வழங்குவதற்கான சில ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2. ஆய்வுப் பிரச்சினை

மார்க்க அறிவினைப் பெற்றுக் கொள்வதில் முஸ்லிம் பெண்கள் பின்னடைந்துள்ளனர்.

### 3. ஆய்வின் நோக்கம்

- முஸ்லிம் பெண்கள் மார்க்கக் கல்வி பெறுதலின் அவசியத்தை வலியுறுத்தல்
- பிரதேசத்தில் மார்க்கக் கல்வியை வழங்குவதற்கான வாய்ப்புக்களை இனங்காணல்
- மார்க்கக் கல்வியை பெறுவதில் முஸ்லிம் பெண்களின் பின்னடைவுகளுக்கான காரணங்களைக் கண்டறிதல்
- முஸ்லிம் பெண்கள் மார்க்க அறிவைப் பெற்று அதனை தமது நடைமுறை வாழ்வில் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கல்

### 4. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்

இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளை மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளான அவதானம், வினாக் கொத்து, பேட்டி முதலிய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக MS Excel பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் இருக்கும் 130 குடும்பங்களில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 60 குடும்பங்களில்

இருந்தும் 60 ஆண்களும் 60 பெண்களும் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துகள் வினியோகிக்கப்பட்டன. அவற்றுள் பூரணப்படுத்தப்பட்ட 120 வினாக்கொத்துகளும் மீளப் பெறப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டது.

பிரதேசத்தின் கல்விமான்கள், பள்ளித் தலைவர், பள்ளிவாயல் நிர்வாகி, பாமர, படித்த பெண்கள் ஒரு சிலரும் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டதன் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டன. பெண்களின் நடைமுறைகள் சில நேரடியாகவும் அவதானிக்கப்பட்டன.


### 5. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

பிரதேச பெண்கள் மார்க்க அறிவினை பெற்றுக் கொள்வதற்கான கீழ்வரும் நடைமுறைகள் மீதான அவர்களின் ஆர்வத்தினை கண்டறிவதற்காக ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 120 ஆண், பெண் இருபாலாரினதும் விருப்புநிலை பற்றி ஆய்வு செய்த போது பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

**அட்டவணை: 01**

| மார்க்க அறிவினைக் கற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள் | விருப்புநிலை வீதங்களில் (100) |
|---|---|
| பெண் பிள்ளைகளை இஸ்லாமிய மார்க்க கல்வி பீடங்களுக்கு அனுப்புதல் | (15%) |
| மஸ்ஜித்கள் ஊடாக பெண்கள் மார்க்க கல்வியை பெறுதல் | (36%) |
| குடும்பங்களில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் | (41%) |
| இஸ்லாமிய இயக்கங்கள், ஏனைய அமைப்புக்கள் மூலம் மார்க்க அறிவினை கற்றுக் கொள்ளல் | (8%) |

**வரைபடம்:01**




இவ்வரைபடத்தினைப் பார்க்கும் போது குடும்பங்கள் மூலமாக இவற்றைப் பெறுவதற்கான விருப்புநிலையை 41 வீதமானோர் கொண்டிருந்தனர். இஸ்லாமிய இயக்கங்கள் பிரதேசத்தின் பெண்கள் விவகாரங்களில்


ஈடுபாடு காட்டுவதனை பெருமளவானோர் ஆதரிக்கவில்லை. இதற்கு இயக்கங்கள் தீவிரவாத போக்குகளை கொண்டிருப்பவை, இஸ்லாத்தில் இல்லாத சில விடயங்களையும் அவை உட்புகுத்துகின்றன போன்ற தவறான அபிப்பிராயங்களே காரணங்களாகும். பெண்பிள்ளைகளை இஸ்லாமிய கலாபீடங்களுக்கு அனுப்பிவைப்பதில் 15 வீதமானோரே விருப்பம் கொண்டுள்ளனர். பெண் பிள்ளைகளை இஸ்லாமிய மார்க்க கல்வி பீடங்களுக்கு அனுப்புவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாமை, சமூக அந்தஸ்த்தினைப் பெற முடியாமை போன்றவற்றை இதற்கு காரணங்களாகக் குறிப்பிடுகின்றனர்.

பெண்கள் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்வதற்காக பிரதேசத்தில் ஏதேனும் முயற்சிகள் அல்லது நடைமுறைகள் உள்ளனவா என்பதனை கண்டறியுமுகமாகவும் அவை தொடர்பான அவர்களின் திருப்தி நிலையைக் கண்டறிவதற்காகவும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இயக்கரீதியான முயற்சிகள், குடும்ப உறுப்பினர்களின் தூண்டுதல்கள், இஸ்லாமிய தொடர்பு சாதனங்கள், நூலகங்கள், மஸ்ஜித்கள், மத்ரஸாக்கள் ஆகியவற்றின் பங்களிப்புக்கள் என வினாக்கொத்துக்களினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் வகைப்படுத்தப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதன்படி பின்வரும் முடிவுகள் கிடைக்கப்பெற்றன.


**அட்டவணை: 02**

| **முயற்சிகள்** | **திருப்தி** | **ஓரளவு திருப்தி** | **மிகைத் திருப்தி** | **திருப்தி இல்லை** | **ஓரளவு திருப்தி இல்லை** | **மிகை திருப்தி இல்லை** |
|---|---|---|---|---|---|---|
| மஸ்ஜித்கள் | - | - | - | 113 | 7 | - |
| இயக்கங்கள் | - | 12 | - | 102 | 6 | - |
| குடும்பங்கள் | 3 | 7 | - | 55 | 27 | 28 |
| ஏனைய அமைப்புக்கள் | - | - | - | 120 | - | - |


**வரைபடம் : 02**




**வரைபடம் : 03**




**வரைபடம் : 04**




**வரைபடம் : 05**



இவற்றை நோக்கும் போது பிரதேசத்தில் பெண்களுக்கான மார்க்க அறிவு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது என்பது கண்டறியப்பட்டது. மேற்குறிப்பிட்ட எந்தவோர் விடயத்திலும் பிரதேச ஆண்களும் பெண்களும் பூரண திருப்தி கொள்ளவில்லை. மார்க்க விடயத்தில் பெண்களின், சமூகத்தின் நிலைப்பாடு தொடர்பாக ஆய்வாளர்கள் மேற்கொண்ட நீண்டநாள் அவதானம், நேர்காணல் மூலம் மார்க்க விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் பெண்களின் சில நடைமுறைகள், அவை தொடர்பான அவர்களின் அறிவு, சமூகத்தின் நிலை என்பன பின்தங்கிய நிலையில் இருப்பதனை அறிய முடிந்தது.

பெரும்பாலான பெண்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளைக் கூட உரிய முறையில் அதற்கான சட்ட திட்டங்களுடன் நடைமுறைப்படுத்தத் தெரியாத நிலையில் உள்ளனர். அது மட்டுமன்றி பெண்கள் தொடர்பான சட்டதிட்டங்களில் கூட அவர்கள் மிகவும் அறிவீனர்களாக உள்ளனர். குறிப்பாக படித்த பெண்கள் கூட இவற்றைக் கற்பதற்கு பெருமளவு ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. இஸ்லாத்திற்கு மாற்றமான மூடநம்பிக்கைகள் அவர்கள் மத்தியில் பிரிக்க முடியாத அலகாக உள்ளன. பிள்ளை வளர்ப்பு, குடும்ப உறவுகளைப் பேணுதல், அயலவர்களுடனான உறவுகள், சமூகத்துடனான உறவுகள், அந்நிய ஆண்களுடனான உறவுகள், இஸ்லாமிய ஆடை அமைப்பினை பின்பற்றுதல் போன்ற விடயங்களிலும் அவர்களிடம் போதிய மார்க்க அறிவு இல்லை. சிலர் அவற்றை அறிந்திருந்த போதும் அவற்றை நடைமுறை வாழ்வில் செயற்படுத்துவது மிகக் குறைவாகவே உள்ளது. அவர்கள் மார்க்க அறிவினை ஒரு சில இபாதத்துகளோடு மட்டுப்படுத்தி விட்டனர். தமது குழந்தைகள் இவற்றை மட்டும் பின்பற்றினால் போதும் என்ற நிலைப்பாட்டிலேயே அவர்கள் உள்ளனர்.

பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை மார்க்கக் கல்வியினை போதிக்கும் இஸ்லாமிய கலாபீடங்களுக்கு அனுப்புவதனை விட அரச பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்புவதனையே அதிகம் விரும்புகின்றனர். இஸ்லாமிய துறையை ஒரு பிள்ளை தெரிவு செய்வதை விட ஏனைய துறைகளைத் தெரிவு செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை மார்க்கக் கலாபீடங்களில் பட்டம் பெற்று வெளியேறிய மௌலவியாக்கள் மூன்று பேர் மாத்திரமே உள்ளனர். அவர்கள் கூட தமது சமூகப் பணிகளை குறிப்பாக பெண்களுக்கு மார்க்கக் கல்வியை வழங்குவதனை முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. ஒரு சில இயக்கங்களினால் குறிப்பாக தப்லீக் ஜமாஅத் போன்ற இயக்கங்கள் பெண்களை ஜமாஅத்துக்கு அழைத்துச் செல்லுதல், பெண்களுக்கான சிறப்பு பயான்களை வீடுகளில் ஏற்பாடு செய்தல் போன்ற நடைமுறைகளை மேற்கொண்டாலும் அவைகூட தொடராக மேற்கொள்ளப்படுவதில்லை. ஒரு சில குடும்பங்களே இதற்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றன. எனவே, இந்த இயக்கங்களும் தமது இயக்க சக்தியை இழந்த நிலையிலேயே உள்ளன.

சமூகத் தலைவர்கள் எவரும் பெண்கள் மத்தியில் மார்க்க விழிப்புணர்வூட்டுவதில் கரிசனை கொண்டதாகத் தெரியவில்லை. பிரதேசத்தில் பெண்களின் விடயங்களை மேம்படுத்துவதற்கான எந்தவோர் மகளிர் அமைப்பும் செயற்படவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்புச் செய்ய வேண்டிய பிரதான இடங்களாக மஸ்ஜித்கள் அமைந்துள்ளன. இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜித்கள் மேற்கொண்ட பணிகள் இதற்கு

சிறந்த எடுத்தக்காட்டாகும். இன்று வணக்கவழிபாடுகளுடன் மாத்திரம் இவற்றின் பணி மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. அதிலும் பெண்களுக்கான மார்க்கக் கல்வியை வழங்குவதில் இவற்றின் பங்களிப்பு மிகக் குறைவானதே. ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரையிலும் இது விதிவிலக்கல்ல.

எனவே, மார்க்க விடயத்தில் ஆய்வுப் பிரதேசம் இவ்வாறு பின்தங்கியிருப்பதற்கான காரணங்களைக் கண்டறியுமுகமாக பிரதேசத்தில் உள்ள படித்த சில கல்விமான்களையும் பள்ளித் தலைவரையும், ஜமாஅத் நிர்வாகியையும், குடும்ப தலைவர், பெண்கள் சிலரையும் நேர்கண்டு வினவியபோது அவர்கள் பின்வரும் காரணங்களைக் குறிப்பிட்டனர்.

### 5.1 காரணங்கள்

01. சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கும் சமூக சிந்தனையாளர்கள் குறைவு
02. மார்க்கத்தைப் பற்றிய போதிய அறிவின்மை, அவற்றைக் கற்றுக் கொள்வதற்கான ஆர்வமின்மை
03. பெண்கள் மார்க்கக் கல்வியை கற்பதன் அவசியத்தினை உணராமை
04. உலகக் கல்வியை கற்பதன் மூலம் உயர் பதவிகளை வகிக்கலாம்; சிறந்த தொழில், மதிப்பு பெறலாம் என்ற மனோநிலை
05. இயக்கங்களின் செயற்பாடுகளை ஆதரிக்காமை; அவற்றின் சமூகப்பணி குறித்த அறியாமை
06. பிரதேச மக்களிடையே ஒற்றுமையின்மை
07. பெண்கள் மத்தியில் தொலைத் தொடர்பு, பொழுது போக்குச் சாதனங்களின் செல்வாக்கு
08. பெண்பிள்ளைகளை சிறுவயதிலேயே ஆங்கிலம், சிங்களம் போன்ற பிற மொழிகளை கற்பிப்பதற்கு வேறு பிரதேசங்களுக்கு அனுப்புகின்றமை
09. மார்க்கக் கல்வி கற்ற பெண் ஆலிம்கள் தமது பணிகளை உரிய முறையில் செய்யாமை
10. வசதிபடைத்தோர் பெண்கள் மத்தியில் மார்க்க விழிப்புணர்வூட்டுவதற்கான திட்டங்களை மேற்கொள்ள பண ரீதியாக ஒத்துழைப்பு வழங்காமை
11. தகுதியான பள்ளி நிர்வாகம் இன்மையும், சமூகப் பணிகளுக்கென செலவிடும் நிதி அமைப்புக்கள் இன்மையும்
12. பெண்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தும் எந்த அமைப்பும் இன்மை
13. ஒரு சில இபாதத்துக்களை நிறைவேற்றினால் மாத்திரம் மார்க்கத்தில் பூரணத்துவம் கிடைத்துவிடும் என்ற மனோநிலை
14. குடும்பத்தில் உள்ள ஆண்கள் பெண்களுக்கு மார்க்கக் கல்வியை வழங்குவதற்கு ஒத்துழையாமையும், அவர்களின் பணியை வீட்டோடு சுருக்கி விட்டமையும்
15. இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை என்பவற்றை உள்ளடக்கிய நூலகங்கள் இன்மையும், பிரதேசத்தில் அவற்றை வினியோகிப்பதற்கான வழிமுறைகள் இன்மையும்

### 5.2 கண்டறிந்தவை

01. மார்க்க அறிவு என்பது பெண்கள் மத்தியில் மிகவும் பின்னடைவான ஒரு நிலையில் உள்ளது.
02. குறிப்பிட்ட விடயங்களில் மாத்திரம் மார்க்கத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றனர்.
03. பெண்கள் மார்க்க அறிவினை வழங்குவதில் விருப்பம் கொண்ட போதிலும் அதில் பெருமளவு ஆதரவு காட்டுவதாகத் தெரியவில்லை.

04. இஸ்லாமிய இயக்கங்களின் பணிகளை பிரதேச மக்கள் தவறாக புரிந்துள்ளனர். அதனால் அவற்றுக்கு ஆதரவு வழங்குவதில்லை.
05. மார்க்கத்தை கற்ற பெண் ஆலிம்கள் தமது பணிகளை சரிவர நிறைவேற்றுவதில்லை
06. பெண்கள் விவகாரம் சம்பந்தமாக பிரத்தியேக குழுக்களோ அமைப்புக்களோ இல்லை
07. த.்.வா அமைப்புக்களின் பணி செயலிழந்துள்ளது.
08. உலகக் கல்விக்கு வழங்கும் ஆதரவு மார்க்க கல்வியை கற்பதற்கு வழங்கப்படவில்லை.
09. சிறப்பற்ற பள்ளி நிர்வாகமும் நிர்வாகத்திற்கு பிரதேச மக்களின் ஒத்துழைப்பின்மையும்
10. மார்க்கக் கல்வியை வழங்குவதற்கான எந்த நடைமுறைகளிலும் மக்கள் திருப்தியற்ற நிலையில் உள்ளனர்.
11. பிரதேசத்தில் மார்க்க அறிவினை வழங்குவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆகவே, எதிர்காலத்தில் கீழ்குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஆய்வின் நோக்கத்தை அடையப் பெறலாம்.

**6. ஆலோசனைகள்**

01. மஸ்ஜித், அது சார்ந்த நிர்வாகம் அதன் தார்மீகப் பணிகளை விரிவுபடுத்தல் வேண்டும்.
02. வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் குத்பா பிரசங்கங்கள் பெண்கள் தொடர்பான விடயங்கள், பெண்கள் சார் பணிகளின் தேவைகள் குறித்தும் நிகழ்த்தப்பட வேண்டும்.
03. இயக்கங்கள் (த.்.வா அமைப்புக்கள்) தொடர்பான மக்களின் தவறான அபிப்பிராயங்களைக் களைவதோடு அவற்றின் பணிகளை மேற்கொள்ள பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.
04. இப்பிரதேசத்தில் உள்ள பெண் ஆலிமாக்கள் பெண்களுக்கான தர்பியா வகுப்புக்கள், குர்ஆன் மத்ரஸாக்கள், பெண்களுக்கான பயான் நிகழ்ச்சிகளை மேற்கொள்வதோடு தாம் கற்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களில் மாணவிகளைச் சேர்ப்பதற்குத் தூண்டுவதும் தமது செயற்பாடுகளில் முன்மாதிரியாக இருப்பதும் இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகளைப் பெற்று பிரதேசத்தில் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்தலும் வேண்டும்.
05. வாராந்தமோ அல்லது மாதாந்தமோ பிரத்தியேகமாக பெண்களுக்கான சட்ட வகுப்புக்களை நடாத்த ஆலிமாக்களும் பள்ளிவாசல் நிர்வாகமும் ஆவண செய்ய வேண்டும்.
06. இவை போன்ற பணிகளை நிறைவேற்ற பெண்களுக்கான விஷேட குழு அல்லது அமைப்பொன்றை பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவு செய்து அவர்கள் சார்ந்த மார்க்கப் பணிகளை நிறைவேற்ற உதவி புரிய வேண்டும்.
07. பொருத்தமான இஸ்லாமிய நிகழ்வுகளுக்கேற்ப மார்க்க சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட வேண்டும்.
08. மாதாந்த தர்பியா வகுப்புக்களை ஏற்பாடு செய்தல் வேண்டும்.
09. அல்குர்ஆன் மத்ரஸாக்களை தரமான சட்டங்கள், தீனிய்யாத், தர்பியா என்பன உள்ளடங்கப்பட்டதாக மாற்றியமைத்தல் வேண்டும்.
10. மஸ்ஜித்களில் அன்றாட ஹதீஸ் வகுப்புக்கள் நடாத்தல், பெண்கள் தொடர்பான சட்ட திட்டங்களை பொருத்தமான மார்க்க அறிஞர்களைக் கொண்டு தெளிவுபடுத்தல் வேண்டும்.
11. பெண் சிறுமிகளுக்கான அல்குர்ஆன், ஹதீஸ் மனனப் போட்டிகள் நடாத்துதல் வேண்டும்.
12. மார்க்க சம்பந்தப்பட்ட விவாத அரங்குகளை படித்த முஸ்லிம் பெண்களிடையே மேற்கொள்ளுதல் வேண்டும்.

13. தஜ்வீத் முறைப்படி அல்குர்ஆனை ஓதும் முறையை (வயதடிப்படையில்) கற்றுக் கொடுப்பதோடு தப்ஸீர் விளக்கங்கள் துறைசார் அறிஞர்களைக் கொண்டு வழங்கப்படல் வேண்டும்.
14. பெண்கள் மார்க்க அறிவு பெறுவதன் அவசியம், முக்கியத்துவம் குறித்து குடும்பத்தில் உள்ள ஆண்கள் பெண்களுக்கு வலியுறுத்தல் வேண்டும்.
15. பிள்ளைகளை மார்க்க அறிவு பெறுவதற்கு பெற்றோர் தூண்டுதல் அளித்தல் வேண்டும்.
16. பெற்றொர் உலகியல் கல்வியை வழங்குவதற்கு எடுக்கும் கரிசனையை தமது பெண் பிள்ளைகள் மார்க்க அறிவு பெறுவதிலும் காட்ட வேண்டும்.
17. இயன்றவரை பெண்கள் வீணான விடயங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக தமது நேரங்களை மார்க்க அறிவினைக் கற்றுக் கொள்வதற்காகச் செலவிட வேண்டும்.
18. ஜம்இய்யதுல் உலமா போன்ற இஸ்லாமிய அறிஞர் சபை இதற்கான ஒரு திட்டத்தை வகுத்து, அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**7. முடிவுரை**

முடிவாக நோக்கும் போது இவ்வாய்வானது மார்க்க ரீதியான நடைமுறைகள் பயிலப்படும் ஒரு பின்னடைவான பிரதேசத்தை மையப்படுத்தி, இப்பிரதேசத்தில் மார்க்க அறிவிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் பெண்களின் நிலை தொடர்பான சில விடயங்களைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி இவ்வாய்வுப் பிரதேசத்தில் பெண்கள் மார்க்க அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாக இருப்பதும் பெண்கள் மார்க்க அறிவில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதும், அவற்றில் பிரதேச மக்கள் பூரண திருப்தியற்ற நிலையில் இருப்பதும் கண்டறியப்பட்டது. பெண்களின் இந்நிலைக்கு பிரதேசத்தின் பல்வேறு சமய, சமூகக் காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியிருப்பதனையும் அறிய முடிந்தது. எனவே, இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை பெண்கள் மார்க்க அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு சில வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, இவற்றைச் சரியாக பயன்படுத்துவதோடு மேற்குறிப்பிட்ட ஆலோசனைகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்பிரதேச பெண்கள் மத்தியில் மார்க்க ரீதியான ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம்.

**நேர்காணப்பட்டோர்:**

1. அலியார் லெப்பை, (11.04.2014), பள்ளி நிர்வாகி, நிக்கவெவ ஜும்மா பள்ளிவாயல்.
2. அஸ்லம், இஸட்.ஏ (12.04.2014), நிக்கவெவ.
3. அஷ்ரப், இஸட். ஏ (நளீமி) (12.04.2014), நிக்கவெவ, டுபாய் தூதுவராலயம், கொழும்பு.
4. இப்றாஹிம், எம்.சீ (10.04.2014), நிக்கவெவ, அதிபர், கே/சுலைமானியா நவோதய தேசிய பாடசாலை, கன்னத்தொட்டை
5. இர்பான் முஹமட், எம்.எஸ் (10.04.2014), நிக்கவெவ, ஊடகவியலாளர், வசந்தம் டி.வி.
6. கதீஜா, எம்.சீ (10.04.2014), நிக்கவெவ.
7. கருத்த உடையார், எம் (10.04.2014), நிக்கவெவ - திருமணப் பதிவாளர்
8. குறைஷியா, எஸ் (10.04.2014), நிக்கவெவ.
9. சாஜஹான், எம்.வை (11.04.2014), நிக்கவெவ.
10. சுல்தான், எம்.சீ. (10.04.2014), நிக்கவெவ, பள்ளித் தலைவர், நிக்கவெவ ஜும்மா பள்ளிவாயல்.
11. செய்னுல் ஆப்தீன், (10.04.2014), நிக்கவெவ, ஓய்வுபெற்ற அதிபர், அ/ஊற்றுப்பிட்டி மு.வி.

12. பாத்தும்மா, எம் (12.04.2014), நிக்கவெவ, ஆசிரியை, அ/கொல்லன்குட்டிகம மு.வி.

13. முஹமட், (11.04.2014) நிக்கவெவ, ஓய்வுபெற்ற ஆசிரியர், அ/கனேவல்பொல மு.ம.வி.